[3rd September 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Water-supply Scheme for the Tiruppur Municipality has been designed to cater to the needs of an ultimate population of one and a quarter lakhs expected in 1991 at 15 gallons per head per day. The source of the scheme is Rs. 108·45 lakhs.

(*b*) Sixty-eight per cent of the work has been completed. The scheme will be completed in 1960–61.

SRI N. K. PALANISAMI : இப்போது, லோயர் பவானியிலிருந்து தண்ணீர் எடுக்க சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே கடலாறுவரையிலும் குழாய் போடப்பட்டிருக்கிறதே ! அது வரை குழாய் போடுவதற்குச் செய்யபபட்ட செலவு அனாவசியச் செலவு தானே ? கீழ் பவானியிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்று ஏன் ஆரம்பத்திலேயே முடிவு செய்யப்படவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மேட்டுப்பாளையத்திலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்போகிறார்கள். குழாயைப் பொறுத்த வரையில், பெரிய திட்டத்திற்கு பெரிய குழாய் போடவேண்டியிருக்கும். இதற்கு முன்பு போட்ட குழாய் சின்னக் குழாயாக இருக்கக்கூடும்.

Kundar Bridge in Shencottah taluk

* 105 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether work has been resumed in Kundar Bridge in Shencottah taluk;

(*b*) if so, when it will be completed; and

(*c*) if not, when the work will be resumed?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Tenders have been called for and the work will be taken up for execution after settlement of contract.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் பால வேலை ஆரம்பமாகி நான்கு வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. இதற்கு முதலில் போட்ட எஸ்டிமேட் என்ன. 'டெக்' லெவலுக்குமேல் கட்டுவதற்கு எஸ்டிமேட் புதுப்பிக்கப்பட்டிருக்கிறதே ! பழைய எஸ்டிமேட் 50,000 ரூபாய் அளவில் இருந்தது. இப்போது இதற்கு 2 லட்சம் ரூபாய்க்கும் மேல் செலவாகும் என்று சொல்லுகிறார்களே ! முக்கால் பங்கு வேலை ஆன பிறகு ஏன் செலவு அதிகமாகிறது ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே, இதற்கு திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய சர்க்காரால் 50,000 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருந்தது. செங்கோட்டைப் பகுதி நமது ராஜ்யத்திற்கு வந்த பிறகு நமது எஞ்சினியர்கள் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்தார்கள். இவர்கள், இதற்கு 50,000 ரூபாய் செலவு செய்தால் அமைப்பு நன்றாக நிலைக்காது என்று கூறியிருக்கிறார்கள். எனவே நமது ஸ்டாண்டர்ட் பிரகாரம் இதைக் கட்டத் தீர்மானித்தோம். அவ்வாறு கட்டுவதற்கு 1,80,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு அதற்கு மத்திய சர்க்காரிடம் அங்கீகாரம் கோரினோம். அவர்களும் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். திட்ட வேலையை கண்ட்ராக்டரிடம் கொடுத்து நடத்தி வருகிறோம்.

3rd September 1959]

Sri K. SATTANATHA KARAYALAR: இதுவரையில் டெக் லெவலுக்கு கட்டி முடிந்தாகி விட்டதே! அப்படி இருக்க இப்போது 1,80,000 ரூபாய் இதற்குச் செலவாகும் என்று சொல்லுகிறார்களே! மேலே போடப்படும் ப்ளாட்பாரத்திற்கு மட்டும் இவ்வளவு செலவாகுமா? கீழே உள்ளதையும் இடித்துவிட்டுக் கட்டப் போகிறார்களா?

The Hon. Sri P. KAKKAN: The following are the reasons:

(1) a roadway of 24 feet over the bridge has been provided now as against 20 feet provided for by the Travancore-Cochin State;

(2) vertical clearance has been increased as per standards by redesigning the bed blocks;

(3) design for the superstructure has been revised as per Provincial Highways standards of this State;

(4) current schedule of rates for Tirunelveli district has been provided now for the balance of work to be done in the estimate against the rates of Travancore-Cochin State;

(5) increase in cost of cement and steel as per I.S.D. rates.

Sandalwood

* 106 Q.—**Sri K. SATTANATHA KARAYALAR**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether artificial regeneration is practised in the sandalwood bearing forests in this State; and

(*b*) if so, how far it is successful?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri K. SATTANATHA KARAYALAR: இது சம்பந்தமாக சமீபத்தில் ஏதோ ஆராய்ச்சிகள் நடந்து "பாரஸைட் ப்ளாண்ட்" வைத்தால் "ரீஜெனரேட்" பண்ண முடியும் என்ற அபிப்பிராயம் சொல்லப்பட்டதே! அதை சர்க்கார் பரிசீலித்ததா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: செயற்கை முறையில் ரீஜெனரேட் செய்வதற்கு ஆராய்ச்சி செய்ய முன்பு இதை பாதிக்கும் வியாதியைப் போக்க வேண்டும். அந்த வியாதியைப் போக்காமல் செயற்கை முறையில் ரீஜெனரேட் செய்வதில் பயனில்லை என்று இப்போது கருதப்படுகிறது. ஆனால், நாசுரல் ரீஜெனரேஷன் இப்போதே நடக்கிறது. அதை பறவைகள் செய்கின்றன.

Sri S. M. ANNAMALAI: சந்தன மரக் காடுகள் ஜவ்வாது மலையில்தான் நிறைய இருக்கின்றன. ஆனால் அங்கே அவை ஆண்டுக்கு ஆண்டு அழிந்துகொண்டே வருகின்றன. ஆகவே சர்க்கார் அங்கே செயற்கை முறையில் சந்தன மரங்களை உற்பத்திசெய்ய நடவடிக்கை எடுக்குமா? நாசுரல் ரீஜெனரேஷன் பட்சிகளால் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இவை பட்சிகளால் அதிகமாக உண்டாக்கப்படுவதில்லை. எனவே இவைகளை செயற்கை முறையில் உண்டாக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: முன்பு அளித்த பதிலிலேயே இதற்கு பதில் கூறியிருக்கிறேன். செயற்கை முறையில் இவைகளை உண்டாக்க முற்படும் முன்பு இவைகளை அழிக்கும் வியாதியை போக்க வேண்டும். இவைகள் வியாதியால்தான் அழிக்கப்படுகின்றன. ஜவ்வாது மலையைப்பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். இவைகளைப்